**<u>சுருக்கம்</u>**

காலிமனைவரி – திருவொற்றியூர் நகராட்சிப் பகுதிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுதல் – வரைபட அனுமதி வழங்கும்போது விதிக்கப்படும் காலிமனைவரியிலிருந்து விலக்களித்து – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (2ப) எண். 51 நாள் 28 .6. 2010

**<u>படிக்க</u>:-**

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.16453/2010/ ஆர்.1, நாள் 20.5.2010.

-----

**<u>ஆணை:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட நகர நில அளவை எண்.3 சர்வே எண்.619/1–ல் 5440 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடம் கட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமக் கடிதம் ந.க.எண்.பி.3/6793/08, நாள் 11.08.2009–ன்படி வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி பின்வருமாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | கட்டிட உரிமையாணை கட்டணம் | ரூ. 14,59,400/– |
| 2 | கட்டுமான தொழிலாளர் நல வாரியக் கட்டணம் | ரூ. 30,32,200/– |
| 3 | காலிமனை வரி | ரூ.1,03,62,342/– |

மேலும் மேற்படிக் கட்டணங்களை செலுத்தக் கோரி குடிசை மாற்று வாரியத்திற்கு திருவொற்றியூர் நகராட்சி மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், இது குறித்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் நகராட்சிக்கு அனுப்பிய கடிதத்தில், மேற்படி இடத்தில் <u>சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு இலவசமாகக் குடியிருப்பு கட்டித் தருகின்றது என்றும்,</u> அதற்கு வாடகை ஏதும் வசூல் செய்யப்படவில்லை

எனவும், கட்டிட உரிமையாணைக் கட்டணம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியக் கட்டணம் ஆகியவைகளை செலுத்தி விடுவதாகவும், காலிமனை வரி வசூல் செய்வதில் இருந்து விலக்களிக்க கோரியதாகவும், எனவே குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில் கோரியபடி, காலிமனை வரி ரூ.1,03,62,342/–ஐ வசூல் செய்வதிலிருந்து விலக்களிப்பதற்கு நகர்மன்றத்தால் 21.4.2010 அன்றய தீர்மான எண்.77–ல் அனுமதி அளிக்கப்பட்டதாகவும், எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு மேற்சொன்ன காலிமனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க அரசின் ஆணையை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கோரியுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட நில அளவை எண்.3 சர்வே எண்.619/1–ல் 5440 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடத்திற்கு திருவொற்றியூர் நகர்மன்றம் தீர்மானம் எண்.77, நாள் 21.4.2010–ல் தீர்மானித்துள்ளபடி காலிமனை வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் நகராட்சி, திருவொற்றியூர்.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்.

**<u>நகல்:</u>**

மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இ.கோ/ உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**